மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 57/22 |
| பெயர் | : | முனியம்மாள் (PW1) |
| க/பெ | : | செல்லதுரை |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Pitchaikutti is absent. Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15 th day of February 2024

**முதல் விசாரணை**

1)நான் மகிலாம்புரத்தில் வசிக்கிறேன், நான் விவசாய வேலை செய்கிறேன், பேபி என்ற பேச்சியம்மாளை தெரியும்.சாட்சி ராமலெட்சுமியை தெரியும்.எதிரி பிச்சைக்குட்டியை தெரியும்.விபத்தில் இறந்துபோன செல்லதுரை என் கணவர்.

2)தேதி நினைவில்லை.6 வருடத்திற்கு முன்பாக இதே மாதத்தில் ஒரு நாள் மாலை 7 மணிக்கு நான் மகிலம்புரத்தில் இருந்தேன்.என் கணவர் கொத்தனார் வேலைக்கு சென்றிருந்தார் வீட்டிற்கு வரவில்லை.கே. பி தளவாய்புரத்தில் யாரோ ஒருவர் போன் செய்து பட்டியல் சாட்சி 2 பேபி என்ற பேச்சியம்மாள் வீட்டிற்கு முன்பாக விபத்து ஏற்பட்டு என் கணவர் கிடப்பதாக சொன்னார்கள்.நான் என் தம்பியை அழைத்துக்கொண்டு கே.பி தளவாய்புரத்திற்கு சென்றேன். நான் போய் பார்த்த போது என் கணவர் பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார்.அவருக்கு மூக்கு,நெற்றி.நாடி ஆகிய இடங்களில் காயம் பட்டு இருந்தது.என் கணவர் வேலைக்கு சென்றுவிட்டு வரும்போது அவர் யாரோ ஒருவரின் வாகனத்தில் வந்து கீழே விழுந்துவிட்டதாக சொன்னார்கள்.

3)என் கணவரை 108 ஆம்புலன்சில் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றோம்.போலீசார் வந்து என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.என்னிடம் காட்டப்படும புகாா வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையதுதான்.**(மேற்படி புகார்வாக்குமூலம் அ.சா ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**மறுநாள் விசாரித்தபோது கேபி தளவாய்புரத்தை சேர்ந்த சண்முகத்தின் மகன்

பிச்சைக்குட்டி இரு சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டிவந்தபோது பின்னால் உட்கார்ந்திருந்த என் கணவர் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டு உள்ளது.அந்த வாகனம் பேரூரணியில் இருந்து கேபி தளவாய்புரத்திற்கு கிழக்கில் இருந்து மேற்காக வந்துள்ளது.என் கணவர் 11 நாள் சிகிச்சையில் இருந்து சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார்.போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) என் கணவர் இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததில் பார்த்த நபர்கள் என்று நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.எனக்கு தகவல் கொடுத்தவரின் பெயரையும் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

2)என் கணவர் கீழே விழுந்ததாக சொல்லப்படும் இடம் குண்டுகுழியுமாக இருந்தது என்றால் சரிதான்.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு தகவல் கிடைத்து போலீசார் வந்து விட்டார்கள் என்றால் சரிதான்.நான் அன்றையதினமே புகார்மனு கொடுத்துவிட்டேன்.அன்றையதினமே போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். அதற்கு மறுநாளும் போலீசார் என்னை விசாரித்தனர்.அதன் பின்னர் என்னை விசாரிக்கவில்லை.

3)நான் என் கணவரை மருத்துவமனைக்கு சேர்ப்பதற்கு உடன் செல்லவில்லை என்றால் சரியல்ல.என் கணவர் யாருடைய இரு சக்கர வாகனத்திலும் செல்லவில்லை என்றாலும் அவர் நடந்து செல்லும் போது அந்த வழியாக சென்ற அடையாளம் தெரியாத வாகனத்தால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.விபத்து ஏற்படுத்திய வாகனத்தை கண்டுபிடிக்காமல் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.எதிரிக்கும் அவரது வாகனத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.